
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1244

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


## மாநாடு

ர.பிரகாசு

121

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# பெரியாருக்கு கைத்தடி வழங்கிய இளைஞர்கள்!



ஓவியம் : சிகரன்

‘சென்னை மாவட்ட 6-வது சுயமரியாதை மாநாடு’, 1945-ஆம் ஆண்டு, டிசம்பர் 15-ஆம் நாள், செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. காலை 8.30 மணிக்கு, சுயமரியாதை இயக்கப் பாடல்களுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.

வரவேற்புரை ஆற்றிய எம்.எஸ்.முத்து, “வீணர்களும் பிறரைச் சுரண்டி செல்வம் திரட்டுவோரும் பெருகி, அகங்காரமும் ஆணவமும் தாண்டவமாடி, கொடுங்கோலாட்சி ஓங்கி, வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் பசியும் பெருகியதால்தான் ரஷ்யாவில் சமதர்மம் தோன்ற வேண்டியதாயிற்று. அதுபோலவே, இந்தியாவில் அறியாமையை வளர்த்து, மத மூடப் பழக்கவழக்கங்களைப் பெருக்கி, சாதி சமய வேறுபாடுகளைப் புகுத்தி, சாதிக்கொரு நீதியென வகுத்து வைத்து, பிராமண ஆதிக்கம் கொடுங்கோலாட்சி நடத்திவருமாறு ஆரியம் அடிகோலி விட்டிருப்பதால்தான், இங்கே ‘சுயமரியாதை இயக்கம்’ தோன்றவேண்டியது இன்றியமையாததாகிவிட்டது” என்றார்.

மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய வி.சின்னதம்பி, “அணுகுண்டின் தன்மையைவிட அதிகம் சக்திவாய்ந்த ‘பகுத்தறிவு’ என்னும் வலிய ஆயுதத்தை நமது பெரியார், நம் ஒவ்வொருவரிடமும் அளித்துள்ளார். அதன் துணைக்கொண்டு, திராவிட தனிப்பெரும் பழைமையை நிலைநாட்டல், ஆரிய அகந்தையை அழித்தல், தன்மான உணர்ச்சியை உணரச்செய்தல், தீண்டாமையைப் போக்குதல், பாட்டாளிகளின் துயர் துடைத்தல், திராவிட தனி ஆட்சி நிறுவுதல் ஆகிய அரும்பெரும் காரியங்களை நாம் செய்து முடிப்போம்” என்று உணர்ச்சி பொங்கப் பேசினார்.

அதன்பிறகு, ‘நம் நாடு’ என்ற தலைப்பில், ஜனார்த்தனமும் ‘எது கலை?’ என்ற தலைப்பில், நாவலர் நெடுஞ்செழியனும் பேசினர். பின்னர், பாலு ஸ்டோர்ஸ் உரிமையாளர் பாலசுந்தரம், ‘சென்னை நகர திராவிட மாணவர்கள்’ சார்பில் பழநி கனகசபாபதி ஆகியோர் பெரியாருக்கு கறுப்புத்துணி மாலை அணிவித்து வரவேற்றனர். பரங்கிமலை, ஆதம்பாக்கம் ‘பகுத்தறிவு இளைஞர் கழகத்தார்’ பெரியாருக்குக் கைத்தடி ஒன்றைப் பரிசாக வழங்கினர். அதன்பிறகு பேருரையாற்றிய பெரியார், இளைஞர்கள் போராட்டக் களத்திற்குத் தயாராக வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அடுத்து, ‘மறுமலர்ச்சி’ என்பது பற்றி, அறிஞர் அண்ணா சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திருச்சி 4-வது சுயமரியாதை மாகாண மாநாட்டின் தீர்மானங்கள், இங்கு அப்படியே ஏற்கப்பட்டன. அப்போது, கொலை வழக்கு ஒன்றில் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்த என்.எஸ்.கலைவாணர், தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டி விடுதலை செய்யுமாறு, ஆளுநர் மற்றும் வைசிராயை இம்மாநாடு கேட்டுக்கொண்டது.

பாடப்புத்தகங்களில் மதக்கல்வியைப் புகுத்தக் கூடாது, புராணப் பிரசங்கம் செய்யும் அகில இந்திய வானொலி, சுயமரியாதை இயக்க செய்திகளைப் புறக்கணிப்பதற்குக் கண்டனம், ஒரே வகுப்பில் திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்தை விடுத்து, சாதி கடந்த திருமணங்களைப் புரிய முன் வர வேண்டும், மடாதிபதிகளாகவும் - சங்கராச்சாரிகளாகவும் - ஜீயர்களாகவும் இருப்பவர்கள், மதத்தின் பெயரால் பல்லக்குகளில் ஏறிக்கொண்டு ஆட்கள் மீது சவாரி செய்யும் அநாகரிக வழக்கத்தை சட்டத்தின் மூலம் தடை செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், அப்போது ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய சர்தார் பணிக்கர், வர்ணாசிரம தர்மத்தையும், மதத்தின் பெயரால் மக்கள் சுரண்டப்படுவதையும், அறியாமையில் ஆழ்த்தப்பட்டு வருவதையும் கண்டித்துப் பேசியிருந்தார். இனிமேல், பட்டமளிப்பு விழாக்களில் சொற்பொழிவு ஆற்றப்போகும் தலைவர்கள், பணிக்கரைப் போல பேச வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

....கூட்டம் திரளும்

## பள்ளி உணவில் முட்டை நீக்கம்!

மேற்கு வங்கத்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற பா.ஜ.க. அரசு, பள்ளிக்கூடங்களில் வழங்கப்படும் மதிய உணவில் முட்டை வழங்குவதை நிறுத்தியுள்ளது.

குழந்தைகளுக்கு எளிய, தூய, சத்தான உணவு கோழி முட்டை. அதைத் தடுப்பதன்மூலம், உயர் சாதி இந்துக்களின் உணவு நம்பிக்கைக்காக, பெரும்பான்மைச் சமூகக் குழந்தைகளின் உணவு உரிமையைப் பறித்துள்ளனர்.

மேற்கு வங்கப் பள்ளிகளில், ‘இஸ்கான் நிறுவனம்’ மூலம் மதிய உணவு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அவர்கள் பள்ளிக்கூட மதிய உணவில் முட்டைக்குப் பதில் சத்தான உணவு வழங்குகிறோம் என்று சொல்லி, தமது மோசடி வேலைகளை ஆரம்பித்துவிட்டனர்.

ஏற்கெனவே உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பள்ளிக் குழந்தைகளின் மதிய உணவில் இருந்து முட்டை நீக்கப்பட்டுள்ளது. அந்த வரிசையில், மேற்குவங்கமும் இணைந்துள்ளது.

வட மாநிலங்களில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க., உயர்சாதி இந்துக் குழுக்களின் உணவு அரசியல் தாக்குதலைத் தடுக்காமல் கண்மூடிக்கொண்டிருப்பதும், பள்ளிக் குழந்தைகள் எளிய உணவைத் தடை செய்வதன் மூலமும் பெரும்பான்மையான மக்களின் உணவு உரிமையைப் பறித்துவருகிறது.

தமிழ்நாட்டிலும் குறுக்கு வழியில், மேற்கு வங்கம் போல பள்ளிகளில் மதிய உணவில் சேர்க்கப்படும் முட்டைக்கு ஆபத்து வந்தால் என்ன ஆகும்? என இப்போது, சமூக வலைதளங்களில் விவாதங்கள் செய்து வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் தேர்தல் நிதி!


து.சக்கரவர்த்தி

2015-ஆம் ஆண்டு ஜூன் 5-ஆம் தேதி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, கழகத் தேர்தல் நிதி அளித்து மகிழ்ந்தேன். என்னுடன் தண்டராம்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர் டி.சக்கரவர்த்தி அவர்களும் உடன் வந்திருந்தார். அண்ணன் த.வேணுகோபால் எம்.பி., அண்ணன் எ.வ.வேலு எம்.எல்.ஏ, அவர்களும் அப்போது உடனிருந்தனர். தலைவரைக் கண்டு மகிழ்ந்த நாளே என் வாழ்நாளில் மறக்க முடியாத நாள்.

**- து.சக்கரவர்த்தி,**
**முன்னாள் பொதுக்குழு உறுப்பினர்,**
**சே.கூடலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

121

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தமிழ்ச் சமூகத்தில் சாதி எப்படி உருவானது?




தமிழ்ச் சமூகத்தில் சாதி எப்படி உருவானது? எப்படி பல்கிப் பெருகியது? சாதிக் கலப்புகள் புதிய சாதிகளின் உருவாக்கத்தில் எப்படிப் பங்களித்தன போன்றவற்றைப் பேசும் நூல், ‘தமிழகத்தில் சாதிகள்’. நூலாசிரியர் தீ.ஹேமமாலினி அவர்களின் முனைவர் பட்ட ஆய்வின் ஒரு பகுதியாக இந்நூலைக் குறிப்பிடுகிறார். ‘தடாகம் வெளியீடு’ இந்த நூலைப் பதிப்பித்துள்ளது.

சங்ககாலத்தில் ஒவ்வொரு திணையிலும் 4-5 குடிகள் இருந்தன, இந்தத் திணைக்குடிகளுக்கு இடையே கலப்பு மணங்கள் எல்லாம் சாதாரணமாகவே நடைபெற்றுவந்தன. தொழில்ரீதியிலேயே குடிப்பெயர்கள் அமைந்திருந்தன. இதற்குப் பிறகு, ‘களப்பிரர்கள் காலம்’. இந்தக் காலகட்டத்திலும் கலப்புத்திருமணங்கள் பெரிய அளவில் நடைபெற்றன. பல்லவர் காலத்தில்தான் சாதியின் தாக்கம் தமிழ்ச் சமூகத்தில் அதிகரித்தது, குடிகள் எல்லாம் சாதிகளாக உருப்பெற்றன. சாதிக் கலப்புத்திருமணம் செய்பவர்கள் ஒதுக்கிவைக்கப்பட்டும் புதிய பெயர்களாலும் அறியப்பட்டனர்.

சோழர் காலத்தில் சாதி ஒரு நிறுவனமாகவே வளர்ந்திருந்தது. பார்ப்பனர்கள் உயர் அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள். கோயில்கள் பெருகியதால், பார்ப்பனர்களும் வடஇந்தியப் பகுதிகளில் இருந்தும் அழைத்து வரப்பட்டார்கள். சோழர்களின் வீழ்ச்சிக்குப் பின், பாண்டியர்கள் காலத்தில் சாதியின் தன்மை பாதுகாக்கப்பட்டது. ‘சைவ பிராமணர்கள்’ ‘வைணவ பிராமணர்கள்’ என்ற பிரிவு இந்தக் காலத்தில் உருவாகி இருந்தது. சாதிக் கலப்பினால் பல்வேறு புதிய சாதிகள் உருவாகின.

விஜயநகரப் பேரரசு காலத்தில், சாதிகளின் பெருக்கம் அதிக அளவில் நடைபெற்றது. தெலுங்கு பிராமணர்கள் இந்த சமயத்தில்தான் தமிழகத்தில் காணப்படுகிறார்கள். மேலும், தெலுங்கு சாதிகள் உருவாக்கமும் இச்சமயத்தில்தான் நடந்தது. சாதிப்பெயர்களை பின்னொட்டாக இடும் பழக்கம், விஜயநகரப் பேரரசு காலத்தில் கட்டாயமாக்கப்பட்டது. பார்ப்பனர்கள், தங்களது தலைமையை வலுவாக நிறுவிக்கொண்டார்கள். வைணவத்தின் பொற்காலமாக இந்தக் காலம் அறியப்பட்டது.

ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வந்த பிறகும் புதிய சாதிகள் உருவாகின. மாப்பிளை, மரைக்காயர் போன்ற சாதிகள் புலப்பெயர்வுகளால் நடந்தேறிய இனக்கலப்பால் உருவானவையே. புதிய சாதிகளின் உருவாக்கம் என்பது பல்வேறு காரணிகளால் நடைபெற்றது. அதற்கென ஒற்றைக்காரணம் என எதுவும் இல்லை. நிறத்தின் அடிப்படையில், இடத்தின் அடிப்படையில், பூர்வீகத் தன்மையின் அடிப்படையில் எனப் பல்வேறு காரணங்களின் அடிப்படையிலேயே சாதிகள் உருவாகியுள்ளன.

சில சாதிகள், காலப்போக்கில் உருவாவது போல் சில சாதிகள் அழிந்தும் போயுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பேரரசுகள் அனைத்தும் சாதியை நிறுவனப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளன. சாதி அடுக்கில் பார்ப்பனர்களின் தலைமை என்பது ஒரு நூற்றாண்டில் நடந்த நிகழ்வல்ல. அரசின் துணையுடன்தான் இது நடைபெற்றது. சாதிகளின் பெருக்கத்திற்குப் புறத் திருமணங்களும் (EXOGAMY) பங்களித்துள்ளன.

தமிழ்நாட்டில் சாதிகளின் உருவாக்கம் பற்றிய ஓர் அறிமுகத்தை இந்நூல் முன்வைக்கிறது, நவீன ஆய்வு நோக்கிலும் மானுடவியல் கூற்றின் அடிப்படையிலும் இதன் ஆதாரங்கள் அமைந்துள்ளன. சாதிகள் பற்றி வெளியாகியுள்ள முக்கியமான புத்தகங்களில் ஒன்றாக இந்த நூலைக் குறிப்பிடுகிறார், மானுடவியல் ஆய்வாளர் பக்தவச்சல பாரதி.

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### பேச்சுரிமைத் தடை மீறப்படும்!

1950-ஆம் ஆண்டு அக்டோபர் 25-ஆம் தேதி, கழகத்தின் செயற்குழு கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. ‘திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களுக்கோ அல்லது தனிப்பட்ட முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கோ, பேச்சுரிமையைப் பறிக்கும் வகையில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்படுமானால், அந்தத் தடை உத்தரவை மீறி பேச்சுரிமையை நிலைநாட்ட வேண்டும். மேற்படி தடை உத்தரவை மீறுவதற்குத் தலைமைக் கழகத்திடம் முன் அனுமதி பெறத் தேவையில்லை என அனைத்து கிளைக் கழகங்களுக்கும் அறிவிப்பது’ என்றது அந்தத் தீர்மானம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900